சுருக்கம்

பொதுப்பணிகள் – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு ப.பிரவீன், த/பெ. காலஞ்சென்ற திரு. பெ.பழனிமுத்து– இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் அரசாணைக்கு விலக்களித்தும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ன் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினைத் தளர்வு செய்தும் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3ப) எண். 69

நாள் : 30. 09.2020
சார்வரி, புரட்டாசி 14
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம். திருச்சி அவர்களின் கடித எண். சி2/7282/2019, நாள் 29.07.2019.
3. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1)துறை, நாள் 23.01.2020.

----

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கரூர், கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டத்தில் உதவியாளராக பணிபுரிந்த திரு பி.பழனிமுத்து 08.08.2008 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/மகனான திரு ப.பிரவீன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் அளிக்கப்பட்டு, அவர் 06.09.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அவர் அப்பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு தேர்வில் மார்ச் 2009–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 02.06.1994 ஆகும் என்றும் தெரிவித்து, தனியரின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 06.09.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம் அவர்களின் கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திரு பெ.பழனிமுத்து, உதவியாளர் பொதுப்பணித் துறை பணியிலிருக்கும் போது 8.08.2008அன்று காலமாகியுள்ளார். திரு ப.பிரவீன் என்பவரின் பிறந்த தேதி 02.06.1994 ஆகும். அரசு ஊழியர் இறந்த போது தனியரின் வயது 14 ஆண்டுகள், 2 மாதங்கள். அரசு ஊழியர் திரு பெ.பழனிமுத்து இறந்து மூன்று ஆண்டுகளுக்குள், 04.07.2009 அன்று அவரது வாரிசுதாரர்/ மகனான திரு ப.பிரவீன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வழங்குமாறு அவரது தாயார் திருமதி ப.மேகலா விண்ணப்பம் அளித்துள்ளார். விண்ணப்பம் அளிக்கும் போது தனியரின் வயது 15 ஆண்டுகள், 1 மாதம் ஆகும். பத்தாம் வகுப்பில் மார்ச் 2009–இல தேர்ச்சிப் பெற்றுள்ளார். 06.09.2018 முற்பகல் அன்று இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்துள்ளார். பணியில் சேரும் போது தனியரின் வயது 24 ஆண்டுகள் தனியர் பணி கோரி விண்ணப்பித்த நாளன்று இளநிலை உதவியாளர் பதவிக்குரிய கல்வித்

தகுதியினைப் பெற்றுள்ள போதிலும், மேற்குறிப்பிட்ட பதவிக்கான நிர்ணயிக்கப்பட்ட வயது 18 வயதினை நிறைவு செய்யவில்லை. இந்நேர்வு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவு 20(6)(b)-க்கும் மற்றும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1)துறை, நாள் 23.01.2020-க்கும் முரணானதாகும். எனவே, தனியரின் பணியினை வரன்முறை செய்ய மேற்காண் சட்டப் பிரிவினைத் தளர்வு செய்வதோடு, மேற்குறிப்பிட்ட அரசாணைக்கு விலக்கும் அளிக்க வேண்டியுள்ளது.

3. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் திரு ப.பிரவீன், கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் அளித்த நாளில் 18 வயதினைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால், அவரது பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 06.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யவும், பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பணப்பலன்கள் அளிக்கவும் ஏதுவாக, தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1)துறை, நாள் 23.01.2020--க்கு விலக்களிப்பதோடு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016, பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை அச்சட்டத்தின் பிரிவு 58-இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தித் தளர்வு செய்யலாம் என முடிவு செய்து அவ்வாறே இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது. மேலும், கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ள திரு ப.பிரவீன் என்பவரின் பணியினை அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 06.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா.எண்14468/ ட்டி.1 /2020, நாள் 24.09.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அ.சா.எண் 23736/ஜி1/2020-1, நாள் 26.09.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி மண்டலம், திருச்சி-20.
திரு ப.பிரவீன், இளநிலை உதவியாளர், (தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, திருச்சி மண்டலம், திருச்சி--20 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை-18.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை/ பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ (மேலொப்பமிடப்படுகிறது)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயற் பொறியாளர், பொது.நீ.ஆ.து., சிறப்பு திட்ட கோட்டம், குளித்தலை.

பிரிவு அலுவலர்